**செய்தி வெளியீடு எண்:558** **நாள்: 29.08.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

29.08.2017 அன்று தலைமைச் செயலகத்தில் புலிகள் பாதுகாப்பு அமைப்பு தமிழ்நாடு அறக்கட்டளை ஆளுமைக் குழுவின் 5–வது கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 38 (x)–ன் அடிப்படையில் புலிகள் பாதுகாப்பு அமைப்பிற்கான, தமிழ்நாடு அறக்கட்டளை ஆளுமைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் கீழ் தமிழ்நாட்டில் நான்கு புலிகள் காப்பகங்களான களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

இந்த ஆளுமைக்குழுவானது அரசு விதிகள், சட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஏற்படுத்துதல், வேலை திட்டம், நிதிப்புழக்கம், ஆண்டு வரவுசெலவு கணக்குகளுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் அரசின் ஒப்புதலுடன் பொறுப்புரிமை மூலம் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளுதல், அறக்கட்டளையின் செயல்முறைகளுக்கு ஒப்புதல் அளித்தல், அரசு துறைகள், நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

புலிகள் பாதுகாப்பு ஆளுமைக்குழு கூட்டத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இக்குழுவின் வளர்ச்சி, உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் தொடர்பாக முழுமையாக ஆய்வு செய்ததோடு, சிறப்பாக செயல்படுவதற்கான அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

மேற்காணும் கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு. முகமது நசிமுதின் இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் (வனத்துறை தலைவர்) திரு.பி.ச.தியாகி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), முனைவர் ஹி. பசவராஜு, இ.வ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (புலிகள் திட்டம்) முனைவர்.ப.ரகுராம்சிங், இ.வ.ப., மற்றும் சம்மந்தப்பட்ட நான்கு புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளையின் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் புலிகள் பாதுகாப்பு ஆளுமைக் குழுவின் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**